# OA : 41 of 2020

## “Cooum River under the siege of encroachment: When will the authorities take action?”

தினமலர்
சென்னை | புதன் | 28.7.2021

OA 41/2020

# ஆக்கிரமிப்பு பிடியில் கூவம் ஆறு அதிகாரிகள் நடவடிக்கை எப்போது?

**மணவாள நகர், ஜூலை 28-** திருவள்ளூர், மணவாள நகர் பகுதியில், கூவம் ஆற்றின் இருபுறமும் ஆக்கிரமிப்புக்குள்ளாகி, அதில் கழிவு நீர் கல்க்கப்படுவது, சமூக ஆர்வலர்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டம், பேரம்பாக்கம் அடுத்த, கேசாவரம் அணைக்கட்டு பகுதியில் உருவாகும் கூவம் ஆறு, பேரம்பாக்கம், கொண்டஞ்சேரி, கடம்பத்துார், மணவாள நகர், அரண்வாயல் வழியாக, சென்னையில் நேப்பியார் பாலம் அருகே, கடலில் கலக்கிறது.

இதில், கடம்பத்துார் ஒன்றியம், வெங்கத்துார் ஊராட்சிக்குட்பட்ட மணவாள நகர் பகுதியில், கூவம் ஆற்றின் இருபுறமும் உள்ள கரைப்பகுதி உட்பட, கூவம் ஆற்றை ஆக்கிரமித்து, 400க்கும் மேற்பட்ட குடியிருப்புகள் முளைத்துள்ளன.

மேலும், மணவாள நகர் பகுதியில், திடக்கழிவு மேலாண் திட்டம் மற்றும் கழிவு நீர் கால்வாயும் முறையாக செயல்படுத்தாததால், கூவம் ஆற்றிலேயே, கழிவு நீரும், குப்பையும் சேகரமாகிறது.

இதனால், நிலத்தடி நீர் மட்டம் பாதிக்கப்படுவதோடு, பொதுமக்களுக்கு தொற்று நோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

இதே போல், வீடுகள் மற்றும் தனியார் நிறுவனங்களிலிருந்து எடுக்கப்படும் 'செப்டிங் டேங்க்' கழிவுகளும், கூவம் ஆற்றிலேயே தனியார் லாரிகள் மூலம் விடப்படுகிறது.

எனவே, கூவம் ஆற்றுப் பகுதியில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, குப்பை மற்றும் கழிவு நீர் கலப்பதை தடுக்க, மாவட்ட நிர்வாகம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என, சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

திருவள்ளூரில் மட்டுமின்றி, கூவம் ஆறு ஓடும் வழித்தடம் முழுவதிலும் உள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிந்து, அவற்றை அகற்ற வேண்டும் எனவும், கோரிக்கை வலுத்துள்ளது.



■ கூவம் ஆற்றை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள வீடுகள். இடம்: மணவாள நகர்.

**News Item in Dinamalar newspaper, Chennai Edition dated 28th July 2021**

**Manavala Nagar, 28th July:**

In the Manavala Nagar area of Tiruvallur, both sides of the Koovam river have been encroached and letting the sewage in the river, shocked social activists. The Koovam River, which originates in the Kesavaram Dam area next to Perambakkam in Tiruvallur district, flows through Perambakkam, Kondancherry, Kadambathur, Manavala Nagar, Aranvayal and flows into the sea near Napier Bridge in Chennai. Of these, Kadambathur Union, Manavala Nagar in Venkathur Panchayat, including the River and the banks on both sides of the Coouam River have been encroached by more than 400 settlements. Also, in the Manavala Nagar area, the Solid Waste Management Project and the Sewerage canal system are not implemented properly, so the waste water and garbage is collected in the Cooum River.

As a result, the groundwater level is affected and there is a risk of contagion to the public. Similarly, 'septic tank' wastes of households and private companies is dumped on the Cooum River by private lorries. Therefore, activists have urged the district administration to take appropriate action to remove encroachments in the Cooum river area and prevent the mixing of garbage and waste water. Demands have intensified not only for Tiruvallur district but also for the detection and removal of encroachments along the Cooum river route.